(i) குழுவின் மற்ற உறுப்பினர்களின் உணர்வுகளை அறிந்து செயல்படும் சிறந்த குழுத்தலைவராக இருப்பார்.

(ii) தன்னுடைய தவறுகளைக் குறித்து ஆராயாமல் மற்றவர்களின் தவறுகளைக் காண்பதில் ஆர்வம் கொண்டிருப்பார்

(iii) சமுதாயப் படிநிலைகள் தவிர்க்க இயலாதவை என நம்புபவராக இருப்பார்.

(iv) மற்றவர்களின் தவறுகளை மன்னித்து, அவர்கள் அவற்றில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வழிவகுப்பார்.

**மேற்கண்டவற்றுள் சரியானவை எவை ?**

(A) (i) மற்றும் (iv) மட்டும்.

(B) (i) மற்றும் (ii) மட்டும்.

(C) (ii) மற்றும் (iii) மட்டும்.

(D) (i), (ii) மற்றும் (iii) மட்டும்.

**142. Which are the characteristics of a person with self respect ?**

(i) Such a person will be with *positive self esteem* and will facilitate meaningful social existence.

(ii) Such a person will promote free expression of creative ideas.

(iii) Such a person will treat others with dignity.

(iv) Such a person will have a superior feeling about oneself.

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (iv) only

(D) (i), (ii) and (iii) only

**சுயமரியாதையுள்ள மனிதரின் பண்புநலன்கள் யாவை ?**

(i) அத்தகைய நபர் நேர்மறையான தன்மதிப்பை பெற்றுள்ளவராகவும், அர்த்தமுள்ள சமூக வாழ்வினை உருவாக்குபவராகவும் இருப்பார்.

(ii) அத்தகைய நபர் படைப்பாற்றல் மிக்க சிந்தனைகளைத் தடையின்றி வெளிப்படுத்துவதை ஊக்குவிப்பவராக இருப்பார்.

(iii) அத்தகைய நபர் மற்றவர்களை கண்ணியத்துடன் நடத்துபவராக இருப்பார்.

(iv) அத்தகைய நபர் மற்றவர்களை விட தான் உயர்ந்தவர் என்ற எண்ணத்தைக் கொண்டிருப்பார்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (iv) மட்டும்

(D) (i), (ii) மற்றும் (iii) மட்டும்

**143. Why did Thanthai Periyar write in "Kudiyarasu" that "Government and National consciousness should exist only for the purpose of making the people live with self respect" ?**

(i) He felt that Government or nationalism is not merely to satisfy their mean needs of food and clothes only.

(ii) One's self respect never robs away others' self respect.

(iii) He felt that if true sense of self respect is inculcated in people, then they will certainly create faultless politics and peaceful nation.

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (i) and (iii) only

(D) All the above.

"அரசாங்கமும் தேசிய உணர்வும் மக்களை சுயமரியாதையோடு வாழச் செய்வதையே நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும்" என தந்தை பெரியார் "குடியரசு" இதழில் ஏன் எழுதினார் **?**

(i) அரசாங்கம் அல்லது தேசியம் என்பது மக்களுக்கான உணவு, உடை போன்ற சாதாரணத் தேவைகளை திருப்திபடுத்துவதற்காக மட்டுமே அல்ல என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

(ii) ஒருவருடைய சுயமரியாதை மற்றவருடைய சுயமரியாதையைப் பறிப்பதாக இருக்காது.

(iii) சுயமரியாதை அதனுடைய உண்மையானப் பொருளில் மக்களிடம் உணர்த்தப்பட்டால் அவர்கள் குறைகள் ஏதுமற்ற அரசியலையும், அமைதியான நாட்டையும் உருவாக்குவார்கள் என உணர்ந்திருந்தார்.

(A) (i) மட்டும்.

(B) (i) மற்றும் (ii) மட்டும்.

(C) (i) மற்றும் (iii) மட்டும்.

(D) மேலே உள்ள அனைத்தும்.

**144. In the Sangam age, Kotravai was worshipped as a Goddess by those who inhabited:**

(A) Mountain region

(B) Forest land

(C) Crop land

(D) Dry land

**சங்க காலத்தில் கொற்றவை எனும் தெய்வத்தினை வழிபட்டோர் வாழ்ந்த நிலப்பரப்பு :**

(A) குறிஞ்சி

(B) முல்லை

(C) மருதம்

(D) பாலை

**145. Why is Thirukkural relevant even today ?**

(i) Because, the basic Human nature has not changed much.

(ii) Because, Thirukkural does not focus on specific issues but speaks about the general ideas related to Human existence.

(iii) Because, Thiruvalluvar had anticipated the changing needs of modern society.

(A) (i) only.

(B) (ii) and (iii) only.

(C) (iii) only.

(D) (i) and (ii) only.

திருக்குறள் எதனால் இந்தக் காலக்கட்டத்திற்கும் பொருத்தமாக உள்ளது?

(i) ஏனெனில், அடிப்படை மனித இயல்பு பெருமளவில் மாற்றம் அடையவில்லை.

(ii) ஏனெனில், திருக்குறள் குறிப்பிட்ட சிலவற்றில் மட்டுமே கவனம் செலுத்தாமல், மனிதர்களின் இருப்பு பற்றிய பொதுவான கருத்துகளைக் குறித்தும் பேசுகிறது.

(iii) ஏனெனில், திருவள்ளுவர் நவீன சமுதாயத்தின் மாறிவரும் தேவைகளை முன்கூட்டியே யூகித்திருந்தார்.

(A) (i) மட்டும்

(B) (ii) மற்றும் (iii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (i) மற்றும் (ii) மட்டும்

**146. The flagship scheme that lends special character to the Tamil Nadu model of development is :**

(A) Mid-day Meal scheme.

(B) Special Economic Zones.

(C) Information Technology Parks.

(D) Industrial Estate.

**தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையின் சிறப்புக் குணாம்சத்தை வெளிப்படுத்தும் சீரிய திட்டமாக அறியப்படுவது :**

**(A)** மதிய உணவுத் திட்டம்.

**(B)** சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.

**(C)** தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்.

**(D)** தொழிற் பேட்டைகள்.

**147. Which of the following is / are true with reference to Dr. Muthulakshmi (Reddy) Memorial Inter-Caste Marriage Assistance Scheme:**

(i) There is no income ceiling and minimum educational qualification stipulated.
(ii) Either of the spouse should belong to the Scheduled Caste or Scheduled Tribe communities.
(iii) Either of the spouse should belong to the Forward or other Community and the other spouse should belong to the Backward Classes / Most Backward Classes.

[A] (i) only.

[B] (ii) only.

[C] (i), (ii) and (iii)

[D] None of the above.

மருத்துவர் முத்துலட்சுமி (ரெட்டி) நினைவு ஜாதி மறுப்புத் திருமண (கலப்புத் திருமணம்) நிதி உதவித் திட்டம் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானது எது / எவை ?

(i) குறைந்தபட்ச வருமான வரம்போ, குறைந்தபட்ச கல்வித் தகுதியோ கிடையாது.
(ii) தம்பதியரில் ஒருவர் பட்டியல் வகுப்பினராகவோ அல்லது பட்டியல் பழங்குடியினராகவோ இருத்தல் வேண்டும்.
(iii)தம்பதியரில் ஒருவர் முற்பட்ட அல்லது இதர வகுப்பினராகவும், மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருத்தல் வேண்டும்.

(A) (i) மட்டும்.

(B) (ii) மட்டும்.

(C) (i), (ii), (iii) ஆகியவை.

(D) மேற்கண்டவற்றுள் எவையுமில்லை.

**148. The importance of social harmony in economic development can be understood by which of the following characteristics ?**

**(i)** Social harmony also means peaceful co-existence of various groups in a society which are otherwise divided by various identities.

**(ii)** Peaceful co-existence of various communities means that the government can focus on initiatives related to economic development and the expenditure towards Law and Order management gets reduced to that extent.

**(iii)** Social harmony also ensures a peaceful investment atmosphere wherein investors remain confident of their returns.

**(iv)** Social harmony increases economic disparities.

A) (i) only.
B) (i) and (ii) only.
C) (i), (ii) and (iii)
D) (i) and (iv) only.

**பொருளாதார வளர்ச்சியில் சமூக நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை பின்வரும் எந்த பண்புகளால் புரிந்து கொள்ள முடியும்?**

(i) சமூக நல்லிணக்கம் என்பது பல்வேறு அடையாளங்களால் பிரிந்துகிடக்கும் ஒரு சமூகத்தின் பல்வேறு குழுக்களின் அமைதியான சக வாழ்வு என்பதையும் குறிக்கும்.

(ii) பல்வேறு சமூகங்களின் அமைதியான சகவாழ்வு என்பது அரசு பொருளாதார வளர்ச்சிக்கான முன்னெடுப்புகளில் கவனம் செலுத்த முடிவதைக் குறிக்கும். இது அந்த அளவிற்கு சட்டம் ஒழுங்கு நிர்வாகத்திற்கான செலவினங்களைக் குறைக்க ஏதுவாகிறது.

(iii) முதலீட்டாளர்கள் தங்கள் முதலீட்டிற்கேற்ற வருவாய் கிடைக்கும் எனும் நம்பிக்கையை வழங்கும் ஒரு அமைதியான முதலீட்டுச் சூழ்நிலையை சமூக நல்லிணக்கம் உறுதி செய்கிறது.

(iv) சமூக நல்லிணக்கம் பொருளாதாரச் சமமின்மையை அதிகரிக்கிறது.

[A] (i) மட்டும் [B] (i) மற்றும் (ii) மட்டும்

[C] (i), (ii) மற்றும் (iii) மட்டும் [D] (i) மற்றும் (iv) மட்டும்

**149. Match the following :**

| | | | |
|---|---|---|---|
| i. | Block chain backbone | 1. | Online services |
| ii. | TNeGA | 2. | Remote sensing Technology |
| iii. | E-sevai | 3. | Nambikkai Inaiyam |
| iv. | TN-GIS | 4. | State Nodal Agency |

Choose the correct option from the codes given below:

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

<u>பொருத்துக</u> :

| | | | |
|---|---|---|---|
| (i) | பிளாக் செய்ன் பேக்போன் | 1) | இணையவழிச் சேவைகள் |
| (ii) | TNeGA | 2) | தொலை உணர்வுத் தொழில்நுட்பம் |
| (iii) | இ-சேவை | 3) | நம்பிக்கை இணையம் |
| (iv) | TN-GIS | 4) | மாநில ஒருங்கிணைப்பு முகமை |

கீழ்காண்பவையிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

| | i | ii | iii | iv |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 4 | 3 | 1 | 2 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**150. Which is the objective of Arasu e-sevai centres ?**

(A) Providing unified access to e-services of different government departments on a common platform across the State.

(B) Providing overall guidance to e-governance projects at district level.

(C) Providing on-line examination services.

(D) Providing residential data for Tamil Nadu.

**அரசு இணைய வழிச் சேவை (இ-சேவை) நடுவங்களின் நோக்கம் எது ?**

**(A)** மாநிலம் முழுவதும் பல்வேறு அரசுத் துறைகளின் இணைய வழிச் சேவைகளையும் ஒருங்கிணைத்து ஒரு பொதுத்தளத்தில் அணுகும் வகையில் வழங்குதல்.

**(B)** மாவட்ட அளவிளான மின் ஆளுகைத் திட்டங்களுக்கு வழி காட்டுதல்.

**(C)** இணையவழித் தேர்வுகளுக்கான சேவையினை வழங்குதல்.

**(D)** தமிழ்நாட்டிற்கான குடியிருப்புத் தரவுகளை வழங்குதல்.

**151. Who took major efforts in the emergence of labour organizations in Madras Presidency ?**

(A) M. Thirumalachariar

(B) A. Singaravelar

(C) Thanthai Periyar

(D) Maraimalai Adigal

**சென்னை மாகாணத்தில் தொழிலாளர் அமைப்புகளை உருவாக்கும் முயற்சிகளில் மிக முக்கிய பங்காற்றியவர் யார் ?**

**(A)** எம். திருமலாச்சாரியார்

**(B)** ஏ. சிங்காரவேலர்

**(C)** தந்தை பெரியார்

**(D)** மறைமலை அடிகள்

**152. The philosophy of Social Justice is largely rooted in :**

(A) Natural Justice.

(B) Moral Justice.

(C) Distributive Justice.

(D) Legal Justice.

**சமூக நீதித் தத்துவம் பெருமளவில் வேரூன்றியிருப்பது :**

(A) இயற்கை நீதியில்.

(B) அறம் சார் நீதியில்.

(C) பங்கீட்டு நீதியில்.

(D) சட்டம் சார் நீதியில்.

**153. Match the following :**

| | Social Reform Movements | | Reformers |
|---|---|---|---|
| a) | Theosophical Society | 1. | Veerasalingam Pantulu |
| b) | Self-Respect Movement | 2. | C. Natesanar, T.M. Nair, Thyagarayar. |
| c) | Widow Re-marriage Movement | 3. | Madam Blavatsky |
| d) | Justice Movement | 4. | Thanthai Periyar. |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**கீழ்க்கண்டவற்றைப் பொருத்துக :**

| | சமூக சீர்திருத்த இயக்கங்கள் | | சீர்திருத்தவாதிகள் |
|---|---|---|---|
| a) | தியோஸாஃபிகல் சங்கம் | 1. | வீரேசலிங்கம் பந்துலு |
| b) | சுயமரியாதை இயக்கம் | 2. | சி. நடேசனார், டி.எம். நாயர், தியாகராயர் |
| c) | விதவை மறுமண இயக்கம் | 3. | ப்ளாவாட்ஸ்கி அம்மையார் |
| d) | நீதி இயக்கம் | 4. | தந்தை பெரியார் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

**154. The plight of the villagers and the sufferings they endure while trying to resolve their problem of water scarcity is depicted in the Tamil movie :**

**(A)** Mahanathi **(B)** Neerpparavai

**(C)** Thanneer Thanneer **(D)** Eeram

கிராம மக்கள் தங்களின் தண்ணீர்ப் பற்றாக்குறையினால் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயலும்போது எதிர்கொள்ளும் துயரங்களை வெளிப்படுத்தும் தமிழ்த் திரைப்படம் :

(A) மகாநதி (B) நீர்ப்பறவை

(C) தண்ணீர் தண்ணீர் (D) ஈரம்

**155.** (i) In India, Socio-economic inequalities are well entrenched.

(ii) A law for fair distribution will automatically ensure just distribution of resources.

(iii) Governments will have to ensure a level playing field in order to establish justice.

Which of the above statements is / are true with regard to distribution of resources.

A] (i) only

B] (ii) only

C] (i) and (iii) only

D] (ii) and (iii) only

(i) இந்தியாவில் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நன்கு வேறூன்றியுள்ளன.

(ii) நியாயமான வகையில் வளங்களைப் பகிர்ந்தளிக்க வகைசெய்யும் சட்டங்கள் இயற்றினாலேயே போதுமானது. அச்சட்டங்கள் அவ்வளங்கள் சம அளவில் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்யும்.

(iii) நீதியை நிலைநாட்ட அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

வளங்களைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான மேற்கண்ட கூற்றுகளில் சரியானவை எது / எவை ?

A] (i) மட்டும்

B] (ii) மட்டும்

C] (i) மற்றும் (iii) மட்டும்

D] (ii) மற்றும் (iii) மட்டும்

**156. Which of the following movement urged its members to give up their caste surnames?**

**A]** Pure Tamil movement
**B]** Self Respect movement
**C]** Quit India movement
**D]** Bakthi movement

கீழ்க்காணும் எந்த இயக்கம் அதன் உறுப்பினர்களை தங்களது ஜாதியின் பெயரை தங்கள் பெயருடன் இணைத்து அழைக்கும் வழக்கத்தைக் கைவிட வலியுறுத்தியது?

A] தனித் தமிழ் இயக்கம்

B] சுயமரியாதை இயக்கம்

C] வெள்ளையனே வெளியேறு இயக்கம்

D] பக்தி இயக்கம்.

**157. The Protection of Women from Domestic Violence Act-2005 safeguards women from :**

(A) Physical abuse.
(B) Sexual abuse.
(C) Economic abuse.
(D) All the above.

பெண்களுக்கெதிரான குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டம் 2005 எந்த விதமான வன்முறைகளிலிருந்து பெண்களுக்கு பாதுகாப்பு வழங்குகிறது?

**(A)** உடல் ரீதியான வன்முறை
**(B)** பாலியல் ரீதியான வன்முறை
**(C)** பொருளாதார ரீதியான வன்முறை
**(D)** இந்த மூன்று வகையான வன்முறைகளிலிருந்தும்

**158. Match the Marriage Assistance Schemes of the Government of Tamil Nadu with the respective names given to each scheme :**

| | Scheme | | Name |
|---|---|---|---|
| a) | Marriage Assistance for poor girls | 1. | Annai Terasa |
| b) | Widow re-marriage assistance | 2. | Muthulakshmi Ammaiyar |
| c) | Marriage assistance for orphan girls | 3. | Dharmambal Ammaiyar |
| d) | Inter-caste marriage assistance | 4. | Moovalur Ramamirtham Ammaiyar |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **(A)** | 4 | 3 | 1 | 2 |
| **(B)** | 2 | 1 | 3 | 4 |
| **(C)** | 1 | 2 | 4 | 3 |
| **(D)** | 3 | 4 | 2 | 1 |

**கீழே கொடுக்கப்பட்டுள்ள தமிழக அரசின் திருமண உதவித் திட்டங்களை அவற்றிற்கு சூட்டப்பட்டுள்ள பெயர்களோடு பொருத்தவும் :**

| | திட்டம் | | பெயர் |
|---|---|---|---|
| a) | ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் | 1. | அன்னை தெரசா |
| b) | விதவை மறுமணத் திட்டம் | 2. | முத்துலட்சுமி அம்மையார் |
| c) | ஆதரவற்றப் பெண்களுக்கான திருமண உதவித் திட்டம் | 3. | தர்மாம்பாள் அம்மையார் |
| d) | ஜாதி மறுப்புத் திருமண உதவித் திட்டம் | 4. | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் |

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 1 | 2 |
| (B) | 2 | 1 | 3 | 4 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

**159. The aim of the "Cradle Baby Scheme" of the government of Tamil Nadu is :**

[A] To promote mother-feeding.

[B] To ensure delivery of babies at Hospitals.

[C] To provide immunization to infants.

[D] To eradicate female infanticide.

**தமிழக அரசின் தொட்டில் குழந்தைத் திட்டத்தின் நோக்கம் ;**

[A] தாய்ப்பால் ஊட்டுவதை ஊக்குவித்தல்

[B] மருத்துவமனைகளில் குழந்தைப்பேறு நிகழ்வதை உறுதிசெய்தல்

[C] சிசுக்களுக்கான நோய்த்தடுப்பு முறைகளை வழங்குதல்

[D] பெண் சிசுக் கொலைகளை ஒழித்தல்

**160. Which one of the following is not the journal that carried on the effective propaganda of self-respect ideals?**

[A] Kudiarasu

[B] Revolt

[C] Swathesa Mithran

[D] Viduthalai

**கீழ்க்காணும் நாளேடுகளில் சுயமரியாதைக் கருத்துக்களை சிறப்பான முறையில் பரப்புரை செய்யாத நாளேடு எது ?**

[A] குடியரசு

[B] புரட்சி

[C] சுதேசமித்திரன்

[D] விடுதலை

**161.** (i) The concept of welfare state had its origin in Western Europe after the second World War.

(ii) The main idea of welfare state is that the government should not play any vital role in human development.

**Which of the above statements is / are true ?**

[A] (i) only.

[B] (ii) only.

[C] Both (i) and (ii).

[D] None of the above.

(i) மக்கள் நல அரசு எனும் கருத்தாக்கம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்டதாகும்.

(ii) மக்கள் நல அரசின் முதன்மைச் சிந்தனை என்பது அரசாங்கம் மனித வளர்ச்சியில் எந்த ஒரு முக்கியப் பங்கினையும் ஆற்றக் கூடாது என்பதாகும்.

**மேற்கண்ட கூற்றுகளில் சரியானது எது / எவை ?**

[A] (i) மட்டும் [B] (ii) மட்டும்

[C] (i) மற்றும் (ii) [D] மேற்கண்ட எதுவும் இல்லை

**162. Assertion (A):** In the contemporary society, some people are tempted towards "Hero worship". This is not a healthy trend.

**Reason (R):** Rapid Urbanization creates a sense of being rootless. This inturn creates a longingness "to belong somewhere / to somebody". Therefore, some people are attracted towards the Heroes. It induces a blind following and thereby inhibits a critical thinking of one's own socio-economic problems.

[A] (A) is true, (R) is false.

[B] Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A).

[C] (A) is false, (R) is true.

[D] Both (A) and (R) are true, but (R) is not the correct explanation of (A).

கூற்று (A): இன்றைய சமுதாயத்தில் சிலர் "நாயக வழிபாட்டை" நோக்கி ஈர்க்கப்படுகிறார்கள். இது ஒரு ஆரோக்கியமான போக்கு அல்ல.

காரணம் (R): அதிவேக நகரமயமாக்கல் சிலருக்கு அவர்கள் தங்களது வேர்களை இழந்துவிட்டது போன்ற ஒரு உணர்வினை ஏற்படுத்துகிறது. இது இத்தகைய நபர்களிடம் தாங்கள் "ஏதேனும் ஒரு இடத்தையோ நபரையோ" சார்ந்திருக்க வேண்டும் என்ற ஏக்கத்தை ஏற்படுத்துகிறது. எனவேதான், இவர்கள் புகழ்பெற்ற மனிதர்களை நோக்கி ஈர்க்கப்படுகின்றனர். இது அந்த நாயகர்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதை ஊக்குவிப்பதனால், அவர்கள் தங்களுடைய சமூக, பொருளாதாரப் பிரச்சனைகள் குறித்த திறனாய்வுப் பூர்வமாக சிந்திக்கும் திறனை வலுவிழக்கச் செய்கிறது.

(A) (A) சரி ஆனால் (R) தவறு

[B] (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்.

[C] (A) தவறு ஆனால் (R) சரி

[D] (A) மற்றும் (R) சரி, ஆனால் (R) என்பது (A) -விற்கு சரியான விளக்கமல்ல.

**163. Which of the following pair is correctly matched ?**

| | Scheme | | Chief Minister |
|---|---|---|---|
| [A] | Noon Meal Scheme | i) | J. Jayalalitha |
| [B] | Cradle Baby Scheme | ii) | K. Kamaraj |
| [C] | Samathuvapuram | iii) | C.N. Annadurai |
| [D] | Nutritious Meal Scheme | iv) | M. G. Ramachandran |

**கீழ்க்கண்டவற்றுள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ள இணை எது ?**

| | திட்டம் | | முதலமைச்சர் |
|---|---|---|---|
| [A] | மதிய உணவுத் திட்டம் | i) | ஜெ. ஜெயலலிதா |
| [B] | தொட்டில் குழந்தைத் திட்டம் | ii) | கு. காமராஜ் |
| [C] | சமத்துவபுரம் | iii) | கா.ந. அண்ணாதுரை |
| [D] | சத்துணவுத் திட்டம் | iv) | ம.கோ. இராமச்சந்திரன் |

**164. In the 1962 elections, the Dravida Munnetra Kalagam (DMK) was supported by Swatantra Party. Who was the head of the latter party at that time ?**

[A] E.V.K. Sampath

[B] C. Rajagopalachari

[C] K. Kamaraj

[D] Omanthoor Ramasamy

1962-ஆம் ஆண்டுத் தேர்தலின்போது, திராவிட முன்னேற்றக் கழகத்தை சுதந்திராக் கட்சி ஆதரித்தது. அப்பொழுது சுதந்திராக் கட்சியின் தலைவராக இருந்தவர் யார் ?

[A] ஈ. வெ. கி. சம்பத் [B] ச. இராஜகோபாலாச்சாரி

[C] கு. காமராஜ் [D] ஓமந்தூர் இராமசாமி

**165. Which Chief Minister introduced the Mid-day Meal scheme in independent India ?**

[A] N.T. Rama Rao [B] V.S. Achuthananthan

[C] M.G. Ramachandran [D] K. Kamaraj

**சுதந்திர இந்தியாவில் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய முதலமைச்சர் யார் ?**

[A] என். டி. இராமாராவ் [B] வி. எஸ். அச்சுதானந்தன்

[C] ம.கோ. இராமச்சந்திரன் [D] கு. காமராஜ்

**166. Assertion (A)** : Agriculture continues to be the largest employer in Tamil Nadu.

**Reason (R)** : Non-Agriculture sectors are yet to generate enough employment to effect a shift of labour force.

[A] (A ) is true. But (R) is false.

[B] Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A).

[C] (A) is false. But (R) is true.

[D] Both (A) and (R) are true. But (R) is not the correct explanation of (A).

**கூற்று (A):** தமிழகத்தில் விவசாயமே அதிக நபர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிக் கொண்டிருக்கிறது.

**காரணம் (R):** உழைப்பாளர்கள் தங்களது தொழில்களை மாற்றிக் கொள்வதற்குத் தேவையான அளவிற்கு வேலைவாய்ப்புகளை விவசாயமல்லாத துறைகள் உருவாக்கவில்லை. .

[A] (A) சரி ஆனால் (R) தவறு

[B] (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமாகும்.

[C] (A) தவறு ஆனால் (R) சரி

[D] (A) மற்றும் (R) இரண்டும் சரி, ஆனால் (R) என்பது (A) -விற்கு சரியான விளக்கமல்ல.

**167. Which of the following pair is correctly matched ?**

| | City / Town | | Industry |
|---|---|---|---|
| [A] | Ranipet | i) | Leather |
| [B] | Namakkal | ii) | Fireworks |
| [C] | Erode | iii) | Poultry Farms |
| [D] | Sivakasi | iv) | Power looms |

**கீழ்க்கண்டவற்றுள் எந்த இணை சரியாகப் பொருத்தப்பட்டுள்ளது ?**

| | மாநகரம் / நகரம் | | தொழிற்சாலை |
|---|---|---|---|
| [A] | இராணிப்பேட்டை | i) | தோல் |
| [B] | நாமக்கல் | ii) | பட்டாசு |
| [C] | ஈரோடு | iii) | கோழிப் பண்ணைகள் |
| [D] | சிவகாசி | iv) | மின்தறி |

**168.** (i) Tamil Nadu is grouped among the high enrolment ratio states in respect of school education.

(ii) This has been possible mainly due to the supply of free food, free uniforms, free footwear, scholarship, etc.

**Which of the above statements is / are true ?**

[A] (i) only.

[B] (ii) only.

[C] Both (i) and (ii)

[D] None of the above.

(i) பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை தமிழ்நாடு அதிகமான சேர்க்கை விகிதத்தைக் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) இது சாத்தியமானதற்கு முதன்மையான காரணங்களாக இருப்பது இலவச உணவு, இலவசச் சீருடைகள், இலவசக் காலணிகள், கல்வி உதவித்தொகை போன்றவை வழங்கப்படுவதே ஆகும்.

**மேற்காணப்படும் கூற்றுகளில் சரியானவை எது / எவை ?**

[A] (i) மட்டும் [B] (ii) மட்டும்

[C] (i) மற்றும் (ii) இரண்டும் [D] மேற்கண்ட எதுவும் இல்லை

**169. As per the census 2011, which district of Tamil Nadu possesses the highest literacy rate ?**

[A] Chennai [B] Coimbatore

[C] Kanyakumari [D] Namakkal

2011 -ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி, தமிழ்நாட்டின் எந்த மாவட்டம் மிக அதிகமான கல்வி விகிதத்தைக் கொண்டுள்ளது ?

[A] சென்னை

[B] கோயம்புத்தூர்

[C] கன்னியாகுமரி

[D] நாமக்கல்

**170. "Tamil Nadu developed a commitment to universal and well functioning public services thanks to the power of democratic action, public reasoning and social action".**

**Who said this ?**

[A] Amartya Sen and Jean Dreze.

[B] Dutt and Sundaram.

[C] Raghuram Rajan and Abhijit Banerjee.

[D] Milton Friedman.

'ஜனநாயக செயல்பாடுகள் பகுத்தறியும் திறன், சமூக செயல்பாடுகள் ஆகியவற்றின் விளைவாக அனைவருக்குமானதும், சிறப்புடன் செயல்படுவதுமான பொதுச்சேவைகளை வழங்குவதில் தமிழ்நாடு தனது அர்ப்பணிப்பை வளர்த்துள்ளது.'

**இவ்வாறு கூறியது யார்?**

[A] அமர்த்தியா சென் மற்றும் ஜீன் டிரேஸி.

[B] தத் மற்றும் சுந்தரம்

[C] ரகுராம் ராஜன் மற்றும் அபிஜித் பானர்ஜி.

[D] மில்டன் பிரிட்மென்.

**171. The most important reason/s for the relative success of Tamil Nadu in extending social policies lie/s in :**

(i) Near universal coverage of schemes.
(ii) Populist welfarism.
(iii) People's active involvement in democratic politics.
(iv) Targeted distribution systems.

[A] (i) and (ii) only

[B] (ii), (iii) and (iv) only

[C] (i), (ii) and (iii) only

[D] (iv) only

**சமூகக் கொள்கைகளை விரிவுபடுத்துவதில் ஒப்பீட்டளவில் தமிழ்நாட்டின் வெற்றிக்கு மிக முக்கியக் காரணமாக / காரணங்களாக விளங்குவது ;**

(i) கிட்டத்தட்ட அனைவரையும் உள்ளடக்கியத் திட்டங்கள்
(ii) மக்கள்சார் நலக் கொள்கை
(iii) ஜனநாயக அரசியலில் மக்களின் தீவிர ஈடுபாடு.
(iv) இலக்கு ரீதியிலான விநியோக முறைகள்

[A] (i) மற்றும் (ii) மட்டும்

[B] (ii), (iii) மற்றும் (iv) மட்டும்

[C] (i), (ii) மற்றும் (iii) மட்டும்

[D] (iv) மட்டும்

**172. Which is / are the reason/s for the success of "The Tamil Nadu Model" of Public Health ?**

(i) Tamil Nadu was the first state to enact a Public Health Act in 1939.

(ii) Creation of distinctive Public Health System at district level.

(iii) Good political commitment and leadership in Health sector.

(iv) Heavily centralized Health systems.

[A] (i) and (ii) only

[B] (ii) and (iii) only

[C] (iv) only

[D] (i), (ii) and (iii) only

**பொது சுகாதாரத்தில் "தமிழ்நாடு மாதிரி"யின் வெற்றிக்குக் காரணம் / காரணங்கள் யாது யாவை ?**

(i) 1939 -ஆம் ஆண்டில் பொது சுகாதாரச் சட்டத்தை இயற்றிய முதல் மாநிலம் தமிழ்நாடு.

(ii) மாவட்ட அளவில் தனித்துவமான பொது சுகாதார முறையை ஏற்படுத்தியது.

(iii) சுகாதாரத் துறையில் அரசியல் ரீதியான அர்ப்பணிப்பு மற்றும் தலைமைத்துவம்.

(iv) பெரிதும் மையப்படுத்தப்பட்ட சுகாதார அமைப்புகள்.

[A] (i) மற்றும் (ii) மட்டும்

[B] (ii) மற்றும் (iii) மட்டும்

[C] (iv) மட்டும்

[D] (i), (ii) மற்றும் (iii) மட்டும்

**173. Which of the following is/are the correct statement/s regarding Perarignar Anna with regard to the early days of the Dravidian movement ?**

(i) He understood that medium is the message.

(ii) He understood that affirmative action will lead to progress.

(iii) He used theatre and cinema as effective instruments of communication.

(iv) He was a non believer in distributive justice.

[A] (i) only

[B] (ii) and (iii) only

[C] (iv) only

[D] (i), (ii) and (iii) only

**திராவிட இயக்கத்தின் தொடக்க காலங்களைப் பொறுத்தமட்டில் பேரறிஞர் அண்ணா பற்றிய கீழ்க்காணும் கூற்றுகளில் சரியானது/வை எது/எவை ?**

(i) ஊடகமே செய்தி என்பதை அவர் அறிந்திருந்தார்.

(ii) உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

(iii) அவர் நாடகம் மற்றும் திரை அரங்குகளை தகவல் தொடர்புக்கான சிறந்த கருவிகளாகப் பயன்படுத்தினார்.

(iv) அவர் பகிர்ந்தளிக்கும் நீதியில் நம்பிக்கை கொள்ளாதவர்.

[A] (i) மட்டும்

[B] (ii) மற்றும் (iii) மட்டும்

[C] (iv) மட்டும்

[D] (i), (ii) மற்றும் (iii) மட்டும்

**174. Which of the following fact/s is /are correct ?**

(i) Tamil Nadu has 30.50 % of its total population as urban population.

(ii) IMR in Tamil Nadu is 17 per 1000 whereas the all India average is 34 per 1000 as on 2016.

(iii) Tamil Nadu has come first in the Health Index Report as per Progressive India Report (2018) – Niti Aayog.

(iv) Tamil Nadu accounts for 10% of leather exports and 50% of leather production in the country.

[A] (i) only

[B] (i) and (ii) only

[C] (ii) only

[D] (iii) and (iv) only

**பின்வரும் கூற்றுகளில் சரியானது/வை எது/எவை ?**

(i) தமிழ் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 30.50% மக்கள் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர்.

(ii) 2016-இல் அகில இந்திய அளவில் குழந்தைகளின் இறப்பு விகித சராசரி 1000-க்கு 34 என இருக்கும் நிலையில், தமிழ்நாட்டில் குழந்தைகளின் இறப்பு விகிதம் 1000-க்கு 17 ஆக இருந்தது.

(iii) நிதி ஆயோக்கின் முற்போக்கான இந்திய அறிக்கை 2018 இன் சுகாதார குறியீட்டு அறிக்கையில் தமிழ்நாடு முதல் இடத்தில் உள்ளது.

(iv) நாட்டின் தோல் ஏற்றுமதியில் 10% தோல் உற்பத்தியில் 50% தமிழ்நாட்டின் பங்களிப்பாக உள்ளது.

[A] (i) மட்டும்

[B] (i) மற்றும் (ii) மட்டும்

[C] (ii) மட்டும்

[D] (iii) மற்றும் (iv) மட்டும்

**175. Which district of Tamil Nadu has the lowest child sex ratio according to census 2011 ?**

[A] Madurai

[B] Theni

[C] Ariyalur

[D] Cuddalore

**2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் எந்த மாவட்டம் மிகக் குறைவான குழந்தைப் பாலின விகிதத்தைக் கொண்டுள்ளது ?**

[A] மதுரை

[B] தேனி

[C] அரியலூர்

[D] கடலூர்

**176. If P denotes +, Q denotes -, R denotes X and S denotes ÷, which of the following statement is correct**

[A] 36R4S8Q7P4 = 10

[B] 16R12P49S7Q9 = 200

[C] 32S8R9 = 160Q12R12

[D] 8R8P8S8Q8 = 57

**P என்பது +, Q என்பது -, R என்பது X மற்றும் S என்பது ÷ எனில் கீழ்க்கண்டவற்றில் எது சரியான கூற்று ?**

[A] 36R4S8Q7P4 = 10

[B] 16R12P49S7Q9 = 200

[C] 32S8R9 = 160Q12R12

[D] 8R8P8S8Q8 = 57

**177. A Clock seen on a mirror shows quarter to three. What is the correct time shown by the Clock ?**

[A] 8 hours 15 minutes.

[B] 9 hours 12 minutes.

[C] 8 hours 17 minutes.

[D] 9 hours 15 minutes.

**ஒரு கடிகாரம் கண்ணாடியில் பார்க்கும் போது நேரம் 3 மணி ஆக 15 நிமிடங்கள் உள்ளது எனக் காட்டுகிறது எனில் கடிகாரத்தின் சரியான நேரம் ?**

[A] 8 மணி 15 நிமிடங்கள்

[B] 9 மணி 12 நிமிடங்கள்

[C] 8 மணி 17 நிமிடங்கள்

[D] 9 மணி 15 நிமிடங்கள்

**178. If the volume of a cube is 1000 cu.cm, then find its surface area ?**

[A] 100 sq.cm

[B] 400 sq.cm

[C] 500 sq.cm

[D] 600 sq.cm

**ஒரு கனசதுரத்தின் கன அளவு 1000 க.செ.மீ. எனில் அதன் புறப்பரப்பினைக் காண்க ?**

[A] 100 ச.செ.மீ

[B] 400 ச.செ.மீ

[C] 500 ச.செ.மீ

[D] 600 ச.செ.மீ

**179. A book contains 120 pages. Each page has 35 lines. How many pages will the book contain if every page has 24 lines per page ?**

[A] 170 pages

[B] 180 pages

[C] 175 pages

[D] 185 pages

**ஒவ்வொரு பக்கத்திலும் 35 வரிகளைக் கொண்ட புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் 120 எனில் ஒவ்வொரு பக்கத்திலும் 24 வரிகளாக இருந்தால் அப்புத்தகத்தின் மொத்தப் பக்கங்கள் எத்தனையாக இருக்கும் ?**

[A] 170 பக்கங்கள்

[B] 180 பக்கங்கள்

[C] 175 பக்கங்கள்

[D] 185 பக்கங்கள்

**180. 12 men can complete a work in 36 days. In how many days will 18 men finish the same work ?**

[A] 16

[B] 24

[C] 26

[D] 54

12 ஆட்கள் ஒரு வேலையை 36 நாட்களில் செய்து முடிக்கின்றனர். அதே வேலையை 18 ஆட்கள் எத்தனை நாள்களில் செய்து முடிப்பார்கள் ?

[A] 16

[B] 24

[C] 26

[D] 54

**181. The product of two numbers is 432 and their LCM and HCF are 72 and 6 respectively. If one of the numbers is 24, then find the other number ?**

[A] 16

[B] 18

[C] 22

[D] 36

இரு எண்களின் பெருக்கற்பலன் 432 மற்றும் அவைகளின் மீ.சி.ம. மற்றும் மி.பொ.வ. முறையே 72 மற்றும் 6 ஆகும். அவ்வெண்களில் ஒரு எண் 24 எனில் மற்றொரு எண்ணைக் காண்க ?

[A] 16

[B] 18

[C] 22

[D] 36

**182. Find the total amount if 15 % of it is Rs. 3000?**

[A] Rs. 18,000 [B] Rs. 20,000

[C] Rs. 21,000 [D] Rs. 25,000

**ஒரு தொகையின் 15 % என்பது ரூ. 3000 எனில் அத்தொகையைக் காண்க ?**

[A] ரூ. 18,000 [B] ரூ. 20,000

[C] ரூ. 21,000 [D] ரூ. 25,000

**183. In a class, 40 % of students are boys. 60 % of girls are rank holders. 40 % of students are rank holders. Find the number of boys with rank, if class strength is 50 ?**

[A] 2 [B] 4

[C] 6 [D] 8

ஒரு வகுப்பில் 40% பேர் மாணவர்கள். 60% மாணவிகள் தரம் பெற்றவர்கள். மொத்த மாணவ, மாணவியர்களில் 40% தரம் பெற்றவர்கள். வகுப்பின் மொத்த மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 50 எனில், தரம் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை என்ன ?

[A] 2 [B] 4

[C] 6 [D] 8

**184. Arun drives 120 miles at 60 miles / hr and then drives the next 120 miles at 40 miles/hr. What is his average speed for the entire trip ?**

[A] 42 [B] 48

[C] 50 [D] 54

அருண் என்பவர் ஒரு வாகனத்தை 60 மைல்கள் / மணி என்ற வேகத்தில் 120 மைல்கள் ஓட்டுகிறார். பின்னர் 40 மைல்கள் / மணி என்ற வேகத்தில் அடுத்த 120 மைல்கள் ஓட்டுகிறார் எனில் மொத்தத்தில் அவரது சராசரி வேகம் என்ன ?

[A] 42 [B] 48

[C] 50 [D] 54

**185. In a flower garden, there are 23 rose plants in the first row, 21 in the second row, 19 in the third row and so on. There are 5 rose plants in the last row. How many rows are there in the flower garden ?**

[A] 12 rows [B] 10 rows

[C] 11 rows [D] 13 rows

ஒரு பூந்தோட்டத்தில் முதல் வரிசையில் 23 ரோஜாச் செடிகள், இரண்டாம் வரிசையில் 21 ரோஜாச் செடிகள், மூன்றாம் வரிசையில் 19 ரோஜாச் செடிகள் என ஒரு தொடர் வரிசை அமைப்பில் உள்ளன. கடைசி வரிசையில் 5 ரோஜாச் செடிகள் இருப்பின் அப்பூந்தோட்டத்தில் எத்தனை வரிசைகள் உள்ளன ?

[A] 12 வரிசைகள் [B] 10 வரிசைகள்

[C] 11 வரிசைகள் [D] 13 வரிசைகள்

**186. If the average of the values 18, 41, x, 36, 31, 24, 37, 35, 27, 36 is 31. Find the value of x. ?**

[A] 35 [B] 36

[C] 25 [d] 26

**18, 41, x, 36, 31, 24, 37, 35, 27, 36 இவற்றின் சராசரி 31 எனில் x இன் மதிப்பு என்ன ?**

[A] 35 [B] 36

[C] 25 [d] 26

**187. Which one of the following numbers is exactly divisible by 11 ?**

[A] 235641 [B] 245642

[C] 315624 [D] 415624

**கீழ்க்கண்ட எண்களில் 11 ஆல் மீதியின்றி வகுபடும் எண் எது ?**

[A] 235641 [B] 245642

[C] 315624 [D] 415624

**188. What is unit digit in the product 784 x 618 x 917 x 463 ?**

[A] 6 [B] 2

[C] 4 [D] 8

**784 x 618 x 917 x 463 என்ற பெருக்கல்களில் ஒன்றாவது இலக்கம் என்ன ?**

[A] 6 [B] 2

[C] 4 [D] 8

**189. Find the compound interest on Rs. 1,000 at the rate of 10 % per annum for 18 months when interest is compounded half-yearly?**

[A] Rs. 157.62 [B] Rs. 157.63

[C] Rs. 157.61 [D] Rs. 157.60

**அரையாண்டுக்கு ஒரு முறை வட்டி அசலுடன் சேர்க்கப்பட்டால் ரூ. 1000-க்கு ஆண்டு வட்டி வீதம் 10 % வீதப்படி, 18 மாதங்களுக்குக் கூட்டு வட்டி காணவும் ?**

[A] ரூ. 157.62 [B] ரூ. 157.63

[C] ரூ. 157.61 [D] ரூ. 157.60

**190. If the rate of Compound interest is 12 % per year and compound interest is calculated every 3 months, then what is the total amount after 9 months when the deposited amount is one lakh ?**

[A] Rs.1,09,000.00 [B] Rs.1,09,060.00

[C] Rs.1,09,060.30 [D] Rs.1,09,272.70

**கூட்டு வட்டி வீதம் ஆண்டுக்கு 12 % என்ற வீதத்தில் 3 மாதத்திற்கு ஒரு முறை கணக்கிடப்படும் எனில் ஒரு லட்ச ரூபாய் செலுத்தப்பட்ட பின் 9 மாதம் கழித்து மொத்த தொகை எவ்வளவு ?**

[A] ரூ.1,09,000.00 [B] ரூ.1,09,060.00

[C] ரூ.1,09,060.30 [D] ரூ.1,09,272.70

**191. If A : B = 4 : 6 , B : C = 18 : 5 , Find the ratio of A : B : C ?**

[A] 12 : 18 : 5 [B] 12 : 5 : 18

[C] 18 : 12 : 5 [D] 5 : 18 : 12

**A : B = 4 : 6 , B : C = 18 : 5 , எனில் A : B : C யின் விகிதத்தைக் காண்க ?**

[A] 12 : 18 : 5 [B] 12 : 5 : 18

[C] 18 : 12 : 5 [D] 5 : 18 : 12

**192. How many numbers are there between 200 and 400 which are exactly divisible by 3, 5 and 6 ?**

[A] 8 [B] 9

[C] 7 [D] 6

**200-க்கும் 400-க்கும் இடையேயுள்ள இயல் எண்களில் 3, 5 மற்றும் 6 ஆகிய மூன்று எண்களைக் கொண்டு மீதியின்றி வகுபடும் எண்கள் எத்தனை ?**

[A] 8 [B] 9

[C] 7 [D] 6

**193. In a class of 80 students, 65 % are boys. Find the number of girls ?**

[A] 35 [B] 28

[C] 52 [D] 38

**80 பேர் கொண்ட வகுப்பறையில் 65 % பேர் ஆண்கள் எனில் பெண்களின் எண்ணிக்கை எத்தனை ?**

[A] 35 [B] 28

[C] 52 [D] 38

**194. Choose the best alternative of White : Peace : : Red : ________ ?**

[A] Roses [B] Heart

[C] Violence [D] Danger

**மிகச் சரியான ஒன்றைத் தேர்ந்தெடுத்து பொருத்துக :**
**வெள்ளை : அமைதி : : சிவப்பு : ________ ?**

[A] ரோஜா [B] இதயம்

[C] வன்முறை [D] அபாயம்

**195. Rs. 120 is divided among A , B and C such that A's share is Rs. 20 more than B's and Rs. 20 less than C's. What is B's share ?**

[A] Rs. 10 [B] Rs. 15

[C] Rs. 20 [D] Rs. 25

**A , B** மற்றும் **C** என்ற மூன்று நபர்கள் ரூ. 120 - ஐ பகிர்ந்து கொள்ளும்போது, **A-**ன் பங்கு **B-**ன் பங்கைவிட ரூ. 20 கூடுதலாகவும், **C-** ன் பங்கைவிட ரூ. 20 குறைவாகவும் இருந்தால் **B-**ன் பங்கு எவ்வளவு **?**

[A] ரூ. 10 [B] ரூ. 15

[C] ரூ. 20 [D] ரூ. 25

**196. If the sum of two numbers is 24 and their product is 108, then find the sum of their reciprocals ?**

[A] 2 / 9 [B] 3 / 7

[C] 5 /7 [D] 9 / 2

இரு எண்களின் கூடுதல் 24 மற்றும் அவற்றின் பெருக்கல் 108 எனில் அவ்வெண்களின் தலைகீழிகளின் கூடுதல் காண்க ?

[A] 2 / 9 [B] 3 / 7

[C] 5 /7 [D] 9 / 2

**197. Find the rate percent per annum when a principal of Rs. 5000 /- earns a S.I of Rs. 1600 in 16 months ?**

[A] 20 % [B] 22 %

[C] 18 % [D] 24 %

ரூ. 5,000 அசலுக்கு 16 மாதங்களில் ரூ. 1,600 தனிவட்டி கிடைத்தால், வட்டி வீகிதத்தைக் காண்க ?

[A] 20 % [B] 22 %

[C] 18 % [D] 24 %

**198. The population of a village has a constant growth of 4 % every year. If its present population is 32448. What was the population two years ago ?**

[A] 31424 [B] 28868

[C] 30000 [D] 31242

ஒரு கிராமத்தின் மக்கள் தொகை ஒரே சீராக ஒவ்வொரு ஆண்டும் 4 % கூடிக் கொண்டே செல்கிறது. இப்பொழுது அதன் மக்கள் தொகை 32,448 எனில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் மக்கள்தொகை என்னவாக இருந்திருக்கும் ?

[A] 31424 [B] 28868

[C] 30000 [D] 31242

**199. The area of a quadrilateral is 525 sq.m. The perpendiculars from two vertices to the diagonal are 15 m and 20 m. What is the length of this diagonal ?**

[A] 25 m [B] 30 m

[C] 35 m [D] 45 m

**ஒரு நாற்கரத்தின் பரப்பளவு 525 ச. மீ. அதன் இரு உச்சிகளிலிருந்து மூலைவிட்டத்திற்கு வரையப்படும் செங்குத்தின் நீளங்கள் 15 மீ, 20 மீ எனில் மூலைவிட்டத்தின் நீளமென்ன ?**

[A] 25 மீ. [B] 30 மீ.

[C] 35 மீ. [D] 45 மீ.

**200. A wire can form a square of area 36 sq. cm. What is the area of rectangle when the same wire forms a rectangle in which one side is 2 cm ?**

[A] 12 $cm^2$ [B] 18 $cm^2$

[C] 20 $cm^2$ [D] 24 $cm^2$

**ஒரு கம்பியானது சதுர வடிவத்தை உருவாக்கும் பொழுது அதன் பரப்பளவு 36 ச.செ.மீ. அதே கம்பியைக் கொண்டு 2 செ.மீ. ஒரு பக்க அளவு உடைய ஒரு செவ்வகத்தை உருவாக்கும்போது அச்செவ்வகத்தின் பரப்பளவு என்ன?**

[A] 12 ச.செ.மீ. [B] 18 ச.செ.மீ.

[C] 20 ச.செ.மீ. [D] 24 ச.செ.மீ.